ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2203/34 - 2020 නොවැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2020.11.27

*2203/34 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 277/1940* (III)

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டம்**

*33 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி திஸாநாயக்க முதியன்சேலாகே செனரத் பண்டார திஸாநாயக்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென திருப்தியுற்று, இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரச காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக “தொல்லியல் ஒதுக்கிடம்” ஒன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**செனரத் திஸாநாயக்க,**
தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
*2020, நவெம்பர் 27.*

**அட்டவணை**

நெடுந்தீவு, அழிவடைந்துள்ள துறவிமட கட்டிடத்தொகுதி தொல்லியல் ஒதுக்கிடத்தைக் கொண்டுள்ள இடப்பரப்பு

வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நெடுந்தீவு மேற்கு இல. J01 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் 1 ஏக்கர், 2 றூட் மற்றும் 21.07 பேர்ச் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும், நில அளவையாளர் தலைமையதிபதியின் இடத்தில், கொழும்பு நில அளவையாளர் அத்தியட்சகரினால் அளவிடப்பட்ட 1977 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதிய Ya 1416 ஆம் இலக்க, இட அமைப்பியல் முதன்மைத் திட்டத்தில் விபரிக்கப்படும் இறுதிக் கிராம திட்டத்தில் 1 ஆம் இலக்க காணித்துண்டொன்றாக விபரிக்கப்படும், நெடுந்தீவு அழிவடைந்துள்ள துறவிமட கட்டிடத் தொகுதி தொல்லியல் தளம் என அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும்.

*12-126*

1A - G 33284 — 25 (2020/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.